DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.78/2023**

**prosecution witness: PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>**04.09.2024**</u>

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் மண்டபம் கேம்பில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2022ம் வருடம் ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் மண்டபம்கேம்ப் பஸ் ஸ்டாண்ட் அருகே டீ குடித்துக்கொண்டிருந்தேன் அப்போது எதிரிகள் இருவரும் ஈஸ்வரன் என்பவரை அடித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் அங்கு சென்று அடிக்காதீர்கள் என்று விலக்கிவிட்டேன். ஆஜர் எதிரிகளில் ஒற்றைக் கையுடன் உள்ள நபர் கல்லை வைத்து ஈஸ்வரன் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார். பின்னர் நான் என் வேலைக்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1.காயம்பட்ட ஈஸ்வரன் எனது தம்பி மகன் என்றால் சரிதான். அவர் அந்த பகுதியில் பாட்டில் விற்பனை செய்வது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் டீ குடித்துக்கொண்டிருந்தேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை, எனது தம்பி மகன் ஈஸ்வரன் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தம்பி மகன் ஈஸ்வரன் கேட்டுக்கொண்டதால் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரிதான்.

ஓம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.78/2023**

**prosecution witness: PW-5**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கச்சாமி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் மண்டபம் புது குடியிருப்பில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் இரவு 08.30 மணியளவில் நான் கூலி வேலை பார்த்துவிட்டு மண்டபம் கேம்ப் பஸ்ஸ்டாப் வந்தபோது மண்டபம் போலீசார் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அது **அ.சா.ஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையில் கடந்த 26.06.2022 ம் தேதி இரவு 09.00 மணியளவில் நானும், எங்கள் தெருவைச் சேர்ந்த கீதன் என்பவரும் மண்டபம் கேம்ப் பஸ் ஸ்டாப் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த மண்டபம் காவல்நிலைய ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், கீதன் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார்

விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.